# ஜெமினி சினிமா

6.1.88

ரூ. 2/=



எம்.ஜி.ஆர் திரைப்பட ஆல்பம் எம்.ஜி.ஆர் வாழ்க்கைப் படங்கள்



# வரலாற்று நாயகன்





எம்.ஜி.ஆர்.

இந்த மூன்றெழுத்து அரை நூற்றாண்டாக சினிமாவிலும் அரசியலிலும் கொடிகட்டிப் பறந்த நாயகனின் திருப்பெயர்.

எதிர்நீச்சல் போட்டு படிப்படியாக உயர்ந்து திரையுலகில் அவர் புதிய சகாப்தம் படைத்தார் — புரட்சி நடிகர் ஆனார்.

சோதனை பல வென்று சாதனை புரிந்து அரசியலில் திருப்புமுனை ஏற்படுத்தினார் — புரட்சித் தலைவர் ஆனார்.

இரண்டு துறைகளிலும் அவர் முன்னோடியாக — முதல்வராக விளங்கினார் — மக்கள் திலகம் ஆனார்.

ஏழைகளுக்கு வாரி வழங்கி அவர்களின் இதய தெய்வமாகி வள்ளலுக்கு வள்ளலாகத் திகழ்ந்தார் — பொன்மனச் செம்மல் ஆனார்.

முப்பிறவி கண்டார் — மன உறுதிக்கு மறு பெயர் ஆனார்.

'தாய்க்குலமே' என்று அழைத்து சமுதாயத்தில் பெண்களுக்கு தனிச்சிறப்பைப் பெற்றுத் தந்தார்.

'ரத்தத்தின் ரத்தமே உடன் பிறப்பே' என்று பேச்சின் முதலில் அழைத்து தொண்டர்களை அரவணைத்தார்.

'அண்ணா நாமம் வாழ்க' என்று பேச்சின் இறுதியில் வணக்கம் செலுத்தி தலைவருக்கு உண்மைத் தொண்டரானார்.

கலையுலகின் விடிவெள்ளி நாட்டிற்கு விடிவு தரும் நாயகனாக முடியும் என்பதற்கு அவரே முன்னுதாரணம்.

சினிமாவுக்கு அவர் தந்தது அர்த்தமுள்ள கொள்கை — அவரைத் திரும்பிப் பார்க்காமல் திரையுலகுக்கு எதிர்காலமில்லை.

அரசியல் மூலம் நாட்டு நலனுக்கு புதிய பரிணாமம் கண்டு சத்துணவு தந்து கல்விக்கண் திறந்தார்.

பெரியாரின் சீர்திருத்தத் தமிழை நடைமுறைப் படுத்தி, அரியாசனம் ஏற்றி மொழிகாத்தார்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்புக்கும் உரிமைக்கும் இறுதி மூச்சுவரை பாடுபட்டார்.

இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த தலைவர்களுள் ஒருவரானார்.

அந்த வரலாற்று நாயகனின் காலத்தில் வாழ்ந்ததே நமக்கு பெரும் பாக்கியம் — பெருமை.

அவரது மறைவை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை — தாங்கிக் கொள்ள முடியாத சோகம் அது.

ஏழை மக்களிடம் அவர் காட்டிய பரிவும் பாசமும் அவர் பெயரை என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யும்.

நிர்வாக ஆசிரியர்,
'ஜெமினி சினிமா.'

# எம்.ஜி.ஆர் திரைப்பட ஆல்பம்

**'பொன்மனச் செம்மல்'**
**எம்.ஜி.ஆர் அவர்கள்**
**நடித்து வெளிவந்த படங்களும்,**
**வெளியான ஆண்டுகளும்**

★ 100 நாட்கள் ஓடியவை
★★ 25 வாரங்கள்
★★★ 31 வாரங்கள்

| வரிசை எண் | வெளியான ஆண்டு | படத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | 1936 | சதிலீலாவதி |
| 2 | 1936 | இரு சகோதரர்கள் |
| 3 | 1938 | தட்சயக்ஞம் ★★ |
| 4 | 1938 | வீரஜகதீஷ் |
| 5 | 1939 | மாயமச்சேந்திரா |
| 6 | 1939 | பிரகலாதா |
| 7 | 1941 | வேதவதி (சீதாஜனனம்) |
| 8 | 1941 | அசோக்குமார் ★★ |
| 9 | 1942 | தமிழறியும் பெருமாள் |
| 10 | 1943 | தாசிப்பெண் (அ) ஜோதிமலர் |
| 11 | 1944 | அரிச்சந்திரா |
| 12 | 1945 | சாலிவாஹனன் |
| 13 | 1945 | மீரா |
| 14 | 1946 | ஸ்ரீ முருகன் |
| 15 | 1947 | ராஜகுமாரி |
| 16 | 1947 | பைத்தியக்காரன் ★ |
| 17 | 1948 | அபிமன்யு ★ |
| 18 | 1948 | மோஹினி |
| 19 | 1948 | ராஜமுக்தி |
| 20 | 1949 | ரத்னகுமார் |
| 21 | 1950 | மருதநாட்டு இளவரசி |
| 22 | 1950 | மந்திரிகுமாரி ★ |
| 23 | 1951 | மர்மயோகி ★ |
| 24 | 1951 | ஏக் தா ராஜா (இந்தி) |
| 25 | 1951 | சர்வாதிகாரி |
| 26 | 1951 | சர்வாதிகாரி (தெலுங்கு) |
| 27 | 1952 | அந்தமான் கைதி |
| 28 | 1952 | குமாரி |
| 29 | 1952 | என் தங்கை |
| 30 | 1953 | நாம் |
| 31 | 1953 | ஜெனோவா (மலையாளம்) |
| 32 | 1953 | பணக்காரி |
| 33 | 1953 | ஜெனோவா |
| 34 | 1954 | மலைக்கள்ளன் ★ |
| 35 | 1954 | கூண்டுக்கிளி ★ |
| 36 | 1955 | குலேபகாவலி ★ |
| 37 | 1956 | அலிபாபாவும் 40 திருடர்களும் ★ |
| 38 | 1956 | மதுரை வீரன் ★★ |
| 39 | 1956 | தாய்க்குப்பின் தாரம் ★ |
| 40 | 1957 | சக்கரவர்த்தி திருமகள் |
| 41 | 1957 | ராஜராஜன் |
| 42 | 1957 | புதுமைப்பித்தன் |
| 43 | 1957 | மகாதேவி ★ |
| 44 | 1958 | நாடோடி மன்னன் ★★ |
| 45 | 1959 | தாய் மகளுக்கு கட்டிய தாலி |
| 46 | 1960 | பாக்தாத் திருடன் |
| 47 | 1960 | ராஜா தேசிங்கு |
| 48 | 1960 | மன்னாதி மன்னன் |
| 49 | 1961 | அரசிளங்குமரி |
| 50 | 1961 | திருடாதே ★ |
| 51 | 1961 | சபாஷ் மாப்பிள்ளை ★ |
| 52 | 1961 | நல்லவன் வாழ்வான் |
| 53 | 1961 | தாய் சொல்லை தட்டாதே ★ |
| 54 | 1962 | ராணி சம்யுக்தா |
| 55 | 1962 | மாடப்புறா |
| 56 | 1962 | தாயைக் காத்த தனயன் ★ |
| 57 | 1962 | குடும்பத் தலைவன் |
| 58 | 1962 | பாசம் |
| 59 | 1962 | விக்கிரமாதித்தன் |
| 60 | 1963 | பணத்தோட்டம் ★ |
| 61 | 1963 | கொடுத்து வைத்தவள் |
| 62 | 1963 | தர்மம் தலை காக்கும் ★ |
| 63 | 1963 | கலையரசி |
| 64 | 1963 | பெரிய இடத்துப் பெண் ★ |
| 65 | 1963 | ஆனந்தஜோதி |
| 66 | 1963 | நீதிக்குப்பின் பாசம் ★ |
| 67 | 1963 | காஞ்சித்தலைவன் |
| 68 | 1963 | பரிசு ★ |
| 69 | 1964 | வேட்டைக்காரன் ★ |
| 70 | 1964 | என் கடமை |
| 71 | 1964 | பணக்காரக் குடும்பம் ★ |
| 72 | 1964 | தெய்வத்தாய் ★ |
| 73 | 1964 | தொழிலாளி ★ |
| 74 | 1964 | படகோட்டி ★ |
| 75 | 1964 | தாயின் மடியில் |
| 76 | 1965 | எங்க வீட்டுப்பிள்ளை ★★ |
| 77 | 1965 | பணம் படைத்தவன் ★ |
| 78 | 1965 | ஆயிரத்தில் ஒருவன் ★ |
| 79 | 1965 | கலங்கரை விளக்கம் ★ |
| 80 | 1965 | கன்னித்தாய் ★ |
| 81 | 1965 | தாழம்பூ |
| 82 | 1965 | ஆசைமுகம் |
| 83 | 1966 | அன்பே வா ★★ |
| 84 | 1966 | நான் ஆணையிட்டால் ★ |
| 85 | 1966 | முகராசி ★ |
| 86 | 1966 | நாடோடி ★ |
| 87 | 1966 | சந்திரோதயம் |
| 88 | 1966 | தாலி பாக்யம் |
| 89 | 1966 | தனிப்பிறவி ★ |
| 90 | 1966 | பறக்கும் பாவை ★ |
| 91 | 1966 | பெற்றால்தான் பிள்ளையா ★ |
| 92 | 1967 | தாய்க்குத் தலைமகன் ★ |
| 93 | 1967 | அரசகட்டளை |
| 94 | 1967 | காவல்காரன் ★ |
| 95 | 1967 | விவசாயி |
| 96 | 1968 | ரகசிய போலீஸ் 115 ★ |
| 97 | 1968 | தேர்த்திருவிழா |
| 98 | 1968 | குடியிருந்த கோயில் ★ |
| 99 | 1968 | கண்ணன் என் காதலன் |
| 100 | 1968 | ஒளிவிளக்கு ★ |
| 101 | 1968 | கணவன் |
| 102 | 1968 | புதியபூமி |

கடைசிப் பக்கம் பார்க்க



1



2



10



11

14



15



16



18



21



22





23

24





27



25

30



32







33

34

37





38

40



42





43

45



48



49





50

51





52



55

53





57

59





54



60

63



61





64



62

65





66



67

68



69





72



73



74

75





76

77



78





79


80

81


82


83



86


87

89



90





91

92



93



94



95





96

97





98



99



100



101

102



103





104

105



106





107



108

109





110



111



112







113



116



114



117



115



118





119

120





121



122



123

124





125

126






127

128





129

130





131

132





133



134



136

எம்.ஜி.ஆர் நடித்த திரை பெறாத படங்கள்.





படங்கள் உதவி: பிலிம் நியூஸ் ஆனந்தன்

# நாயகனின் வரலாறு

ஏழைகளின் இதயத்தில் நீங்கா இடம் பெற்று தமிழக வரலாற்றில் புதிய சாதனை படைத்தவர் எம்.ஜி.ஆர் புரட்சி நடிகராக, மக்கள் திலகமாக, புரட்சித் தலைவராக, பொன் மனச் செம்மலாக விளங்கிய இந்த சரித்திர நாயகன் இலங்கையில் உள்ள கண்டியில் 1917-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ந்தேதி கோபாலன் - சத்யபாமா தம்பதியருக்கு ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார். அவருக்கு இரண்டு சகோதரர்கள், இரண்டு சகோதரிகள். மூத்த சகோதரி பெயர் கமலாட்சி. அடுத்த சகோதரர் பாலகிருஷ்ணன். அடுத்த சகோதரர் எம்.ஜி. சக்ரபாணி. இரண்டாவது சகோதரி சுமித்ரா.

எம்.ஜி.ஆருக்கு இரண்டு வயதாக இருந்தபோது தந்தையார் காலமானார். இதனால் அவரது குடும்பத்தினர் தமிழ் நாடு திரும்பி கும்பகோணத்தில் வசித்தனர். வறுமையில் குழந்தைகளை அரவணைத்து வளர்த்தார் சத்யா அம்மையார். தொடக்க கல்வியை கும்பகோணம் அணையாடி பள்ளியில் எம்.ஜி.ஆர் பயின்றார்.

சிறு வயதிலேயே நாடகத்துறையில் எம்.ஜி.ஆருக்கு ஆர்வம் ஏற்பட்டது. அவரது மூத்த சகோதரி கமலாட்சி 16 வயதில் இயற்கை எய்தினார். பிறகு படிப்பை நிறுத்திக் கொண்டு கும்பகோணத்தில் உள்ள ஒரு நாடகக் கம்பெனியில் சேர்ந்தார். சுருட்டை முடியுடன், அழகாக சிவப்பாக இருந்ததால் அவருக்கு நாடகத்தில் நல்ல வேடம் கிடைத்தது. லவனாக லவகுசா நாடகத்தில் நடித்து வந்தார். பின்னர் கந்தசாமி முதலியார் (மறைந்த பழம்பெரும் நடிகர் எம்.கே. ராதாவின் தந்தையார்) ஆதரவில் "சதி லீலாவதி" என்ற சினிமாவில் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேடம் ஏற்று நடித்தார். அவர் நடித்த முதல் திரைப்படம் இதுதான். இதன் மூலம் திரையுலகில் படிப்படியாக உயர்ந்து "ராஜகுமாரி" படத்தில் கதாநாயகன் ஆனார். அப்போது எம்.ஜி.ஆர் காங்கிரஸ் கட்சியில் இருந்தார். கதர் அணிந்தார். காந்திஜியிடம் பற்று கொண்டு மூலை முடுக்கெல்லாம் சென்று காங்கிரஸ் பிரசாரம் செய்தார். அக்கட்சிக்குத் தொண்டர்களைச் சேர்த்தார். அந்த கால கட்டத்தில் "சாலி வாகனன்" என்ற படத்தில் நடித்துக் கொண்டிருந்தார்.

ஒரு சமயம் தி.மு.கழகத் தலைவர் பேரறிஞர் அண்ணாவை சந்திக்கும் சந்தர்ப்பம் எம்.ஜி.ஆருக்குக் கிட்டியது. அதைத் தொடர்ந்து தி.மு.கழகத்தில் இணைந்தார் அண்ணாவின் அன்பு பாசத்தை அபரிமிதமாகப் பெற்று அவரது இதயக்கனியாக விளங்கினார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர் சொந்தமாக நாடகக் கம்பெனி நடத்தி 'சுமைதாங்கி,' 'இன்பக்கனவு,' 'பகைவனின் காதலி' ஆகிய நாடகங்களை நடத்தினார். இன்பக்கனவு நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த போது விபத்தொன்று நடந்து காலில் காயம் ஏற்பட்டது. அத்துடன் அவரது கலைவாழ்வு முடிந்தது என்றுகூட பலர் துஷ்பிரசாரம் செய்தனர். ஆனால் எம்.ஜி.ஆரின் வளர்ச்சியை அந்த விபத்து கொஞ்சமும் பாதிக்கவில்லை. முன்னைவிட பன்மடங்கு அவர் பலம் கொண்டு எழுந்து வீரநடை போட்டார். இது எம்.ஜி.ஆர் எடுத்த முதல் மறுபிறவி. புதிய தெம்புடன் சினிமாத்துறையில் முன்னேறினார்.

தி.மு.கழகத்தின் முக்கிய பொறுப்புகளை ஏற்ற அவர் தமிழ்நாடு மேல்சபை உறுப்பினர் (எம்.எல்.சி) ஆனார். 1967-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின் போது பரங்கிமலைத் தொகுதியில் போட்டியிட்டார். அப்போது அவர் சுடப்பட்டார். குண்டு பாய்ந்து அதிசயமாக உயிர் பிழைத்தார். இது அவர் எடுத்த இரண்டாவது மறுபிறவி. பிரசாரத்திற்கும் செல்லாமல் மருத்துவமனையில் இருந்தவாறே தேர்தலில் பெரும் வெற்றியும் பெற்றார். 1969-ம் ஆண்டு அண்ணா மறைந்த பின் தி.மு.கழக பொருளாளர் ஆனார். தி.மு.கழகத்தின் தாசன் ஆக விளங்கினார். 1972-ம் ஆண்டு அப்போது முதல்வராக இருந்த கருணாநிதிக்கும் எம்.ஜி. ஆருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதன் காரணமாக கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். தொண்டர்கள் எம்.ஜி.ஆர் பக்கம் திரண்டனர். 'அண்ணா தி.மு. கழகம்' என்ற பெயரில் புதிய கட்சி தொடங்கினார். கட்சி தொடங்கிய ஆறுமாதத்தில் திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதிக்கு நடந்த தேர்தலைச் சந்தித்தார். அகில இந்திய, மாநில கட்சி வேட்பாளர்களை எம்.ஜி.ஆரின் வேட்பாளர் பெருவாரியான ஓட்டு வித்தியாசத்தில் தோற்கடித்தார். அதைத் தொடர்ந்து அவரது சாதனையும் புகழும் இந்தியா முழுவதும் பரவியது.

திரையுலக வேந்தனாக 25 ஆண்டுகள் எம்.ஜி.ஆர் அவர்கள் விளங்கினார். 'ரிக்ஷாக்காரன்' படம் மூலம் அகில இந்திய சிறந்த நடிகரானார் - பாரத் பட்டம் வழங்கப்பட்டது. 'சதி லீலாவதி'யில் தொடங்கிய அவரது கலையுலக வாழ்வு 'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்' படத்தில் நிறைவடைந்தது. அவரது முழுநேர அரசியல் வாழ்வு தொடங்கியது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் (1977ல்) நடந்த தமிழக சட்டசபை தேர்தலில் அவரது கட்சி போட்டியிட்டது. அமோக வெற்றி பெற்றது. முதல்-அமைச்சராக எம்.ஜி.ஆர் பொறுப்பு ஏற்றார். 1980-ம் ஆண்டு ஜனவரியில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் இ.காங்கிரஸ் - தி.மு.க கூட்டணி வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர் ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டது. இருந்தாலும் பிறகு நடந்த சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க வெற்றி பெற்றது. எம்.ஜி.ஆர் மீண்டும் முதல் அமைச்சர் ஆனார்.

அவருக்கு 1984-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ந் தேதி உடல்நலக்குறைவு ஏற்பட்டது. அப்பல்லோ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். 12-ந்தேதி அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி சென்னை வந்து நேரில் எம்.ஜி.ஆரின் உடல்நலம் விசாரித்தார். நவம்பர் 14-ந் தேதி எம்.ஜி.ஆர் அமெரிக்கா அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு நியூயார்க் நகரில் உள்ள 'புருக்ளின்' ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மாற்று சிறுநீரகம் பொருத்தப்பட்டது. நோயை வென்று மருத்துவ உலகம் மலைக்கும் வண்ணம் அவர் விரைவாகக் குணம் அடைந்தார். காலனை வெல்ல அவரிடம் காணப்பட்ட மன உறுதியைப் பார்த்த அமெரிக்க டாக்டர்கள் வியந்தனர்.

இது எம்.ஜி.ஆர் மூன்றாவது தடவையாக எடுத்த மறுபிறவி.

முப்பிறவி கண்ட எம்.ஜி.ஆர் அமெரிக்க ஆஸ்பத்திரியில் இருக்கும் போதே தமிழக சட்டசபைக்கு பொதுத் தேர்தல் நடந்தது. படுத்துக் கொண்டே அந்த தேர்தலில் எம்.ஜி.ஆர் ஜெயித்துக் காட்டினார். பழைய தேர்தல்களை விட இந்த தேர்தலில் அ.தி.மு.க அதிக இடங்களையும் பெற்றது. (1977-ம் ஆண்டு தேர்தலில் 126 இடங்களையும், 1980-ல் 129 இடங்களையும் 1984-ல் 133 இடங்களையும் அ.தி.மு.க கைப்பற்றியது. மொத்தத்தில் எம்.ஜி.ஆர் இருந்த தி.முகவே 67 முதல் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளன.) பூரண குணம் அடைந்து 1985-ம் ஆண்டு பிப்ரவரி 4-ந்தேதி எம்.ஜி.ஆர் வெற்றி வீரராக சென்னை திரும்பினார் - தமிழத முதல் அமைச்சராக மூன்றாவது முறையாக பதவி ஏற்றார். இதற்கு முன் மூன்று முறை இப்பொறுப்பை ஏற்று பெருமை பெற்றவர் காமராஜர் தான்.

11 ஆண்டுகள் எம்.ஜி.ஆர் தமிழகத்தை ஆண்டார். வேறு எந்த முதலமைச்சரும் தொடர்ந்து இவ்வளவு காலம் இந்தப் பதவியை வகித்ததில்லை. அவரது பணிகளை - சாதனைகளைப் பாராட்டி சென்னைப் பல்கலைக்கழகம் அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கி கௌரவித்தது.

முதலமைச்சரான பின்பும் ஏழை எளியவரின் உணவு உடை கல்வியே அவருக்கு பிரதானமாக இருந்தது. 83 லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு, இலவச உடை புத்தகம் தந்தார். பிற்பட்ட வகுப்பினரின் 32 சதவீத ஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்தினார்.

படித்தவரும் பாமரரும் அறிய வேண்டிய விஷயங்களைத் தொகுத்துத் தந்து, வற்றாது வாரி வழங்கிய ஜீவ பிரவாகத்தின் சகாப்தம் 24.12.87 அதிகாலை நிறைவுற்றது.











































PRODUCTIONS




















PADINALE
MUNNALE









































படங்கள்: சுபா சுந்தரம்.

தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 103 | 1968 | காதல் வாகனம் |
| 104 | 1969 | அடிமைப்பெண் ★★ |
| 105 | 1969 | நம் நாடு ★ |
| 106 | 1970 | மாட்டுக்காரவேலன் ★★ |
| 107 | 1970 | என் அண்ணன் ★ |
| 108 | 1970 | தலைவன் |
| 109 | 1970 | தேடிவந்த மாப்பிள்ளை ★ |
| 110 | 1970 | எங்கள் தங்கம் ★ |
| 111 | 1971 | குமரிக்கோட்டம் ★ |
| 112 | 1971 | ரிக்ஷாக்காரன் ★★ |
| 113 | 1971 | நீரும் நெருப்பும் |
| 114 | 1971 | ஒரு தாய் மக்கள் |
| 115 | 1972 | சங்கே முழங்கு |
| 116 | 1972 | நல்லநேரம் ★ |
| 117 | 1972 | ராமன் தேடிய சீதை ★ |
| 118 | 1972 | நான் ஏன் பிறந்தேன் |
| 119 | 1972 | அன்னமிட்ட கை |
| 120 | 1972 | இதய வீணை ★ |
| 121 | 1973 | உலகம் சுற்றும் வாலிபன் ★★★ |
| 122 | 1973 | பட்டிக்காட்டு பொன்னையா |
| 123 | 1974 | நேற்று இன்று நாளை ★ |
| 124 | 1974 | உரிமைக்குரல் ★★ |
| 125 | 1974 | சிரித்து வாழ வேண்டும் ★ |
| 126 | 1975 | நினைத்ததை முடிப்பவன் ★ |
| 127 | 1975 | நாளை நமதே ★ |
| 128 | 1975 | இதயக்கனி ★ |
| 129 | 1975 | பல்லாண்டு வாழ்க ★ |
| 130 | 1976 | நீதிக்கு தலைவணங்கு ★ |
| 131 | 1976 | உழைக்கும் கரங்கள் ★ |
| 132 | 1976 | ஊருக்கு உழைப்பவன் ★ |
| 133 | 1977 | நவரத்தினம் |
| 134 | 1977 | இன்றுபோல் என்றும் வாழ்க |
| 135 | 1977 | மீனவ நண்பன் ★ |
| 136 | 1978 | மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் |

எம்.ஜி.ஆர். நடித்து வெளிவராத படங்கள்:

137 அண்ணா நீ என் தெய்வம்
138 நல்லதை நாடு கேட்கும்

ஜெமினி சினிமா

8.1.88 குழல்: 7 நாதம்: 9

நிர்வாக ஆசிரியர் ......... திருமதி திலகம் ராமசாமி
பொறுப்பாசிரியர் ......................... ஏ.வி.பி. சோமு
நிருபர்கள் ........................................ மு. இரவிகுமார்
குரு. சம்பத்குமார்

முன் அட்டை ...................... டாக்டர் எம்.ஜி.ஆர்
படம் .................................................. சுபா சுந்தரம்
நடுப்பக்கம் ......................... டாக்டர் எம்.ஜி.ஆர்
படம் ............................................................ கே.எஸ்

அடுத்த இதழில்....

முன் அட்டை ........................................... அமலா
நடுப்பக்கம் ........................... குஷ்பூ, சுதாராணி

ஜெமினி சினிமா சார்பாக தேஷ் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: து. ராமமூர்த்தி.

நிர்வாக ஆசிரியர்: திருமதி திலகம் ராமசாமி. 9, முதல் தெரு, திருமூர்த்தி நகர், நுங்கம்பாக்கம், சென்னை – 600 034. தபால் பெட்டி எண். 1269.

(தந்தி: ப்யூகல்ஸ், டெலக்ஸ் எண்: 7361, தொலைபேசி எண்: 470295)



TN/MS (c) 593.
Registered as a News Paper in Sri Lanka No QJ/14/News/88

